TNTP150004742021

Presented on : 01-11-2021
Registered on : 01-11-2021
Decided on : 22-07-2026
Duration : 4 years, 8 months, 21 days

**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**

**சார்பு நீதிபதி,**

**துறையூர்.**

**2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.134/2021**

**CNRNO.TNTP150004742021**

V. சுதர்சனம் ... வாதி

/எதிர்/

B. அமுதவள்ளி ... பிரதிவாதி

இந்த வழக்கானது என் முன்பாக இறுதியாக கடந்த 14.07.2026 அன்று விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு. R. ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. U. சபாபதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்களை கேட்டும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . . . .

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதி கடந்த 03.12.2020-ம் தேதி ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஒப்பந்தப்படி கிரைய பாக்கி தொகை ரூ.50,000/-த்தை பிரதிவாதி பெற்றுக்கொண்டு தாவா சொத்தினை வாதி பெயருக்கு வாதி செலவில் பிரதிவாதி கிரையப்பத்திரம் எழுதி

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:57:26 +0530

பதிவு செய்து கொடுக்க கோரியும், தவறும் பட்சத்தில் வாதிக்கு தர வேண்டிய தொகையை வட்டியுடன் சேர்த்து திருப்பி கொடுக்க உத்தரவிடக்கோரியும், தாவா செலவுத்தொகை கோரியும், உ.வி.மு.ச கட்டளை 7 விதி 1 -ன் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வாதி தாக்கல் செய்த திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்.</u>**

(2.1)வாதிக்கு வாதியிடம் இந்த வழக்கு பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தினை கடந்த 03.12.2020-ம் தேதி கிரையம் செய்வதாக கிரையம் பேசி ரூ.4,50,000/- கிரையத் தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி 03.12.2020-ம் தேதி அன்றே வாதியிடம் பிரதிவாதி அட்வான்ஸாக ரூ.4,00,000/- பெற்றுக் கொண்டு பாக்கி கிரைய தொகையான ரூ.50,000/- ஒரு வருட காலகெடுவிற்குள் பெற்றுக் கொண்டு வழக்கு சொத்தினை கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எனவும் வாதி கிரைய பாக்கி தொகையை கொடுத்து பத்திரம் ஏற்படுத்தி கொடுக்க அழைக்கும் காலத்தில் பிரதிவாதி அதனை பெற்றுக் கொண்டு எவ்வித மறுப்பும் இன்றி பத்திரபதிவு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அவ்வாறு பிரதிவாதி மறுத்தால் கிரைய பாக்கித்தொகையை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் செலுத்தி கட்டாயப்பதிவு செய்து கொள்ள வேண்டியது என்றும் பிரதிவாதி தயார் நிலையில் இருந்தும் வாதி கிரையப்பாக்கி தொகையை செலுத்தி கிரையப்பத்திரம் ஏற்படுத்தி கொள்ளவில்லையெனில் கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் தொகையை இழந்துவிடுவது என்றும் உள்ளிட்ட நிபந்தனைகளை கண்டு மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 5904/2020 என்ற எண்ணிட்ட ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2.2)கிரைய ஒப்பந்தப்படி 1 வருட கால கெடுவுக்குள் வாதி கடந்த 10.09.2021-ம் தேதி கிரைய பாக்கித் தொகையை கொடுத்து கிரையப்பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்க அழைத்ததற்கு வழக்கு சொத்தினை பொறுத்து பிரதிவாதி கிரையப்பத்திரம் எழுதிக் கொடுக்காமல் வீண் காலம் கடத்தி வந்தார். இதனால் வாதி பிரதிவாதியிடம் நேரில் சாட்சிகள் முன்னிலையில் கேட்டதற்கு 15.09.2021-ம் தேதிக்குள் கிரையப்பத்திரம் எழுதிக் கொடுப்பதாக கூறியதன் பேரில் நம்பி இருந்து வந்த சூழ்நிலையில் பிரதிவாதி கிரையம் எழுதிக்கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார். மேலும் பிரதிவாதி சொன்ன தேதியான 15.09.2021-ம் தேதியில் வாதி கிரையம் பத்திரம் தயார் செய்து பிரதிவாதியை அழைத்தப்போது சாக்குபோக்கு சொல்லி காலம் தாழ்த்தி வந்ததால் வாதி தன் வழக்கறிஞர் மூலம் கடந்த

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:57:33 +0530

22.09.2021-ம் தேதி  சட்ட அறிவிப்பு கொடுத்துள்ளார். அந்த அறிவிப்பையும் பிரதிவாதி பெற்றுக் கொண்டு கிரைய ஒப்பந்தப்படிக்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்க முன் வராமல் வீண் காலதாமதம் செய்து வருவதோடு  வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு இதுநாள் வரை எந்தவிதமான பதில் அறிவிப்பும் கொடுக்காமல் இருந்து வருகிறார். வாதி பிரதிவாதிக்கு செலுத்த வேண்டிய கிரைய பாக்கியை  நீதிமன்றத்தில் செலுத்த தயார் நிலையில் உள்ளார்.  எனவே, கிரைய ஒப்பந்தப்படி பாக்கி கிரைய தொகையை கொடுத்து தாவா சொத்தினை பொறுத்து வாதி செலவில் கிரையப்பத்திரம் எழுதிக்கொள்ள வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

<u>**பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின்  சுருக்கம்.**</u>

(3.1)வாதியின் தாவா பொய்யும் மோசடியுமானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டியதாகும்.  இந்த எதிர்வழக்குரையில் இந்த எதிர்வாதி உண்மையென்று வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதியே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டும். வழக்குரை சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. உண்மையில் இந்த பிரதிவாதி தாவா சொத்தான ஓட்டுவில்லை வீட்டை வாதிக்கு ரூ.4,50,000/-க்கு கிரையம் செய்து கொடுக்க ஒரு போதும் ஒப்புக்கொள்ளவும் இல்லை. அதற்காக தாவா கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுக்கவும் இல்லை. பிரதிவாதியின் கணவர் ஓட்டுநர் வேலை பார்ப்பதால் அவருக்கென சொந்தமாக ஒரு TATA ACE வாகனம் வாங்க எண்ணம் கொண்டு வாதியிடம் கடந்த 2020-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ரூ.4,00,000/-ம் வட்டிக்கு கடன் கேட்டார். மேற்படி கடன் தொகையை தர வேண்டுமெனில் பிரதிவாதி பெயரில் உள்ள வீடுகளை வாதிக்கு கிரையம் செய்ய ஒப்புக்கொண்டதுபோல் பெயரளவிற்கு ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டும் எனவும், ஆனால் மேற்படி கிரைய ஒப்பந்தத்தின்படி வாதி ஒரு போதும் தாவா சொத்துக்களை கிரையம் செய்து கொடுக்க கேட்கமாட்டேன் என்றும், மாதம் தவறாமல் வட்டி செலுத்தி வந்து அசல் தொகையை திருப்பி கொடுக்கும் போது மேற்படி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுத்துவிடுவதாகவும், வாதி உறுதியளித்ததன்பேரில் பிரதிவாதியும் வேறு வழியின்றி வாதி கேட்டபடி வாதி தயாரித்து தந்த மேற்படி கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்து செய்தார். மற்றபடி தாவா சொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:57:38 +0530

(3.2)வாதியிடம் பிரதிவாதியின் கணவர் பெற்றுக்கொண்ட தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100-க்கு ரூ.3.00 வட்டி ஆகும். அதன்படி கடன் வாங்கிய நாள் முதல் பிரதிவாதி அசல் தொகையான ரூ.4,00,000/- த்திற்கு மாதம் ரூ.12,000/-ம் வட்டி வாதிக்கு செலுத்தி வந்துள்ளார். மேற்படி வட்டி தொகைக்கு வாதி ரசீது எதுவும் கொடுக்கவில்லை. கொரோனா காரணமாக ஊரடங்கு தடை விதிக்கப்பட்டிருந்த காரணத்தால் வாதியிடம் பெற்ற கடன் தொகை மூலம் பிரதிவாதியின் கணவர் வாங்கிய TATA ACE வாகனத்தை இயக்க முடியவில்லை, வருமானமும் ஈட்ட இயலவும் இல்லை. இதனால் 6 மாத காலம் எந்த வருமானமும் இன்றி வாதியிடம் வாங்கிய கடனுக்கு வட்டி மட்டுமே கட்டி வந்ததால் வாதியின் கணவர் வாங்கிய TATA ACE வாகனத்தை பிரதிவாதியின் கணவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து கொள்ளும் முன்பே ரூ.2,00,000/-த்திற்கு விற்று அந்த தொகையை கடந்த 03.06.2021-ம் தேதியில் வாதியிடம் கொடுத்து கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து தரும்படியும் மீதமுள்ள அசல் தொகையான ரூ.2,00,000/-த்தை 6 மாத காலத்தில் திருப்பி தருவதாகவும், கேட்டுக்கொண்டுள்ளார். பிரதிவாதியிடம் ரூ.2,00,000/-ம் தொகையை பெற்றுக் கொண்ட வாதி முழு தொகையும் செலுத்தும்போது தாவா கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து தருவதாகவும், தான் ஏற்கனவே உறுதியளித்தப்படி கிரைய ஒப்பந்தத்தின் பேரில் எந்தவித நீதிமன்ற நடவடிக்கையும் ஒரு போதும் மேற்கொள்ள மாட்டேன் என்று மீண்டும் உறுதியளித்துள்ளார். இதனையடுத்து பிரதிவாதியும் மேற்படி 03.12.2020-ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்யவோ, வாதி கொடுத்த பகுதி தொகையை மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் பதிவு செய்யவோ வாதியை வழியுறுத்தவில்லை.

(3.3)வாதி வழக்கறிவிப்பு அனுப்பியதை பிரதிவாதி பெற்றுக்கொண்டு வாதியை சந்தித்து வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி கேட்டதற்கு வாதியும், தான் தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் காலக்கெடு முடிவடைய இருப்பதால் தனது வழக்கறிஞரின் ஆலோசனைப்படி அனுப்பப்பட்டதாகும். அதற்கு பதில் எதுவும் அனுப்ப தேவை இல்லை என்று வாதி பதில் சொன்னதையடுத்து பிரதிவாதியும் தன் அறியாமையின் காரணமாக எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. உண்மை இவ்வாறு இருக்க ஏதோ வாதியிடம் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரையம் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டு 03.12.2020-ம் தேதி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்திருப்பது பெருத்த மோசடியாகும். தாவா சொத்துக்கள் மட்டுமே பிரதிவாதிக்கு உள்ள ஒரே குடியிருப்பு வீடுகளாகும். அதனை தவிர பிரதிவாதிக்கு

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:57:44 +0530

வேறு வீடு எதுவும் இல்லை. அதனால் அதனை விற்க வேண்டிய அவசியம் எதுவும் பிரதிவாதிக்கு இல்லை. மேலும் தாவா சொத்துக்களான ஓட்டுவில்லை வீடும், அதன் அருகில் உள்ள குடிசை வீடும் கண்ணனூர் கிராமத்தில் பிரதான சாலைக்கு அருகில் அமைந்திருப்பதால் அதன் தற்போதைய மதிப்பு ரூ.20,00,000/-த்திற்கு மேல் பொறுமானுமுள்ளதாகும். அதனை ரூ.4,50,000/-த்திற்கு கிரையம் செய்து தர பிரதிவாதி ஒப்புக்கொண்டதாக தாவா தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இப்பவும் பிரதிவாதி பாக்கி தொகையான வாதிக்கு தரவேண்டிய ரூ.2,00,000/-த்தையும், அதற்கு 03.09.2021 தேதி முதல் நாளது தேதிவரை செலுத்த வேண்டிய வட்டி பாக்கி தொகைகளையும் திரும்ப செலுத்த தயாராகவே உள்ளார். வாதி கிரைய ஒப்பந்தத்தில் பாக்கி தொகை ரூ.50,000/- என்றும், காலக்கெடு ஒரு வருடம் என்றும், கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இருப்பதிலிருந்தே மேற்படி கிரைய ஒப்பந்தமும் போலி என்பதும், பெயரளவுக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதும் மாண்புமிகு நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரியவரும். இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் வழக்கிற்காக ஜோடித்து சொல்லப்பட்டதாகும். எனவே, வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.தாவா வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை சங்கதிகளை பரிசீலனை செய்து கீழ்காணும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

**<u>5.எழுவினாக்கள்.</u>**

1. வாதி கோரியபடி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் பெறத்தக்கவரா?
2. வேறு என்ன பரிகாரம்?

6.வாதி தரப்பில் தாவாவை திருத்தப்பாடு செய்ய இ.நி.ம.எண்.3/2026 தாக்கல் செய்து மாற்றுப்பரிகாரமாக வாதிக்கு தர வேண்டிய தொகையை வட்டியுடன் சேர்த்து கொடுக்க வேண்டுமென வேண்டப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு வழக்குரை பரிகார பகுதியில் திருத்தப்பாடு செய்யப்பட்டுள்ளதால் கீழ்கண்ட கூடுதல் எழுவினா உ.வி.மு.ச கட்டளை 14 விதி 5-ன் படி வனையப்படுகிறது. இதற்கு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை இல்லை என வாதுரையில் தெரிவிக்கப்பட்டது.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:57:51 +0530

**<u>கூடுதல் எழுவினா</u>**

1.வாதி கேட்டுள்ள மாற்றுப்பரிகாரமான வாதிக்கு பிரதிவாதி தர வேண்டிய தொகை வட்டியுடன் திருப்பி கிடைக்கத்தக்கதா?

7.வாதி தரப்பில் சுதர்சனம் வா.சா.1 ஆகவும், கனகராசு வா.சா.2 ஆகவும், ரவிமணி வா.சா.3 ஆகவும், விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>எழுவினா 1-ற்கான தீர்வு</u>**

(8.1)வாதி அசல் வழக்கை பிரதிவாதி மீது வழக்கு சொத்து குறித்து 03.12.2020-ம் தேதி ஏற்பட்ட கிரைய உடன்படிக்கையின்படி பாக்கி தொகை ரூ.50,000/-த்தை பெற்றுக்கொண்டு வழக்கு சொத்தினை பிரதிவாதி வாதிக்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டுமென ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். வாதி வா.சா.1 ஆக தாவா சங்கதிகளை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக கடந்த 03.12.2020-ம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 22.09.2021-ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது முறையே வா.சா.ஆ.2,3 ஆகவும், பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4 ஆகவும், வா.சா.2,3 -ன் ஆதார் அட்டை நகல்கள் முறையே வா.சா.ஆ.5,6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்ட 03.12.2020 -ம் தேதி கிரையத்தொகை ரூ.4,50,000/-த்தில் ரூ.4,00,000/- வாதியிடம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு 1 வருட காலத்திற்குள் பாக்கி ரூ.50,000/-த்தை பெற்றுக்கொண்டு கிரைய பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என தெரிவித்து மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 1 வருட காலக்கெடு முடிவதற்குள் வாதி பிரதிவாதியை கேட்டதற்கு காலம் கடத்தி வந்து 15.09.2021 -ம் தேதி எழுதி கொடுப்பதாக கூறி எழுதி தரவில்லை எனவும், அதனால் வாதி 22.09.2021-ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பி அதனை பிரதிவாதி 25.09.2021-ம் தேதி பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்காததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்து

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:57:58 +0530

கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த ரவிமணி என்பவரை வா.சா.3 ஆகவும், தாவா சங்கதிகளை அறிந்த வாதியின் நண்பர் கனகராசு என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

(8.2)பிரதிவாதி தரப்பில் தாவா கிரைய ஒப்பந்தம் தாவா சொத்தான ஓட்டுவில்லை வீட்டை கிரையம் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டு எழுதி கொடுக்கப்படவில்லை எனவும், பிரதிவாதியின் கணவர் Tata Ace வாகனம் வாங்குவதற்கு வாதியிடம் 2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ரூ.4,00,000/- கடன் கேட்டார் எனவும், அதற்காக பிரதிவாதியின் பெயரிலுள்ள தாவா சொத்தினை பொறுத்து கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுக்க வாதி கேட்டு தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டுள்ளது எனவும், மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.3/- வீதம் அசல் தொகை ரூ.4,00,000/-த்திற்கு வாதிக்கு வட்டி மாதம் ரூ.12,000/- பிரதிவாதி செலுத்தி வந்ததாகவும், கொரோனா காலத்தில் வாகனம் ஓட்டாமல் நஷ்டம் ஏற்பட்டதால் Tata Ace வாகனத்தை ரூ.2,00,000/-த்திற்கு விற்று 03.06.2021-ம் தேதி வாதியிடம் அந்த தொகையை செலுத்தியதாகவும், வாதி முழு தொகையையும் பெற்றுக்கொண்ட பிறகு தாவா கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடுவதாக கூறிவிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் கிரைய தொகையை ரூ.4,00,000/- முன் தொகையாக செலுத்திவிட்டு பாக்கி ரூ.50,000/- 1 வருட கால அவகாசம் போடப்பட்டு கிரைய ஒப்பந்தம் போட்டதிலிருந்தே கிரைய ஒப்பந்தம் பெயரளவில் ஏற்பட்டது என்பது தெளிவாக தெரிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பதிலுரை சங்கதிகளை நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்த வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை மட்டுமே செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் கடந்த 03.12.2020-ம் தேதி வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்டுள்ளது என்பது வா.சா.1,3 சாட்சியத்தின் மூலம் அறியமுடிகிறது.

(8.3)வாதி தனது குறுக்கு விசாரணையில் தான் கால்நடை பராமரிப்பு துறையில் அலுவலக மேலாளராக பணிபுரிந்து மாதம் ரூ.1,03,000/- சம்பளம் பெறுவதாகவும், பிடித்தம் போக ரூ.67,000/- கைக்கு கிடைப்பதாகவும், கிரைய பாக்கி தொகை ரூ.50,000/- 1 மாத சம்பளம் என ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் தன்னிடம் கிரைய பாக்கி தொகை ரூ.50,000/- வழக்கு தாக்கல் செய்தபோது தன்னிடம் இருந்தது என

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:58:04 +0530

காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை எனவும், வா.சா.1 கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள முன் தொகை ரூ.4,00,000/-த்திற்கு வட்டி தொகையான ரூ.3,25,000/- சேர்த்து திருப்பி பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும், ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் வழங்காமல் கிரைய முன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்தக்கோரி தீர்ப்பு வழங்க சம்மதம் தெரிவிப்பதாகவும், பிரதிவாதி கேட்டுக்கொண்டபடி 3 மாத கால அவகாசம் மேற்படி தொகையை திருப்பி செலுத்த அவருக்கு அவகாசம் வழங்க தனக்கு ஆட்சேபனை இல்லை எனவும், பிரதிவாதி தொகை வட்டியுடன் செலுத்திவிட்டால் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்து கொடுக்க சம்மதிக்கிறேன் என சாட்சியமளித்துள்ளார்.

(8.4)கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த வா.சா.3 ரவிமணி தனது குறுக்கு விசாரணையில் வாதி பிரதிவாதிகளை தெரியும், கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள முன் தொகையை வட்டியுடன் பிரதிவாதி திருப்பி செலுத்த தயாராக உள்ளார் என கேட்கப்பட்டுள்ளது. அதற்கு அவர் தனக்கு ஆட்சேபனை இல்லை என கூறியுள்ளார். குறித்தவகை சட்டத்தின் படி ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் பெற வாதி எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதி தற்போது ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரத்தை வலியுறுத்தவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1-ன் மேற்படி குறுக்கு விசாரணை சாட்சியத்திலிருந்து அவர் ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் வழங்காமல் கிரைய முன் தொகையை வட்டியுடன் திருப்பி பெற்றுக்கொள்ள பிரதிவாதிக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதால் வாதிக்கு ஏற்றுதலை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 1-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>கூடுதல் எழுவினா 1-ற்கான தீர்வு</u>**

(9.1)வாதிக்கு ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 1-ற்கு தீர்வு காணப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள முன் தொகையான ரூ.4,00,000/- கடனாக வாதியிடம் பெறப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டும் அதில் ரூ.2,00,000/- திருப்பி செலுத்திவிட்டதாக பதிலுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ரூ.4,00,000/-த்திற்கு உண்டான வட்டி மற்றும் அசல் தொகையில் ரூ.2,00,000/- செலுத்தியதற்கான எவ்வித ரசீதுகளையும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கையில்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:58:10 +0530

பிரதிவாதி ரூ.4,00,000/- வாதியிடம் 03.12.2020-ம் தேதி பெற்றுக்கொண்டதாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தொகை செலுத்தியது குறித்து வாதிக்கு ஆதரவாக வா.சா.3 சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் வாதியை கடந்த 07.07.2026-ம் தேதி குறுக்கு விசாரணை செய்யும்பொழுது வா.சா.1 கிரைய உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள முன் தொகை ரூ.4,00,000/-த்தையும் அதற்குண்டான வட்டி தொகை ரூ.3,25,000/-த்தையும் திருப்பி செலுத்த தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டு அதனை வாதி ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் மேற்படி தொகை செலுத்த 3 மாத கால அவகாசம் கேட்டு அவகாசம் வழங்க தனக்கு ஆட்சேபனை இல்லை என வாதி தெரிவித்துள்ளார். வா.சா.3 குறுக்கு விசாரணையின்போதும் கிரைய முன்தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த பிரதிவாதி தயாராக இருப்பதாக கேள்வி கேட்கப்பட்டுள்ளது. ஆகையால் வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் படியும், பிரதிவாதி தரப்பில் வாதியை கடந்த 07.07.2026 -ம் தேதி குறுக்கு விசாரணை செய்ததன் அடிப்படையிலும் வாதிக்கு சேர வேண்டிய தாவா கிரைய ஒப்பந்த முன் தொகை ரூ.4,00,000/-மும் வட்டி தொகை ரூ.3,25,000/-மும் சேர்ந்து ரூ.7,25,000/- வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து கிடைக்கத்தக்கது எனவும், அதனை பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவர் எனவும், கூடுதல் எழுவினா -1-ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>எழுவினா 2-ற்கான தீர்வு</u>

(10.1)எழுவினா 1-ற்கு வாதிக்கு எதிராக வாதி கேட்டுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்வு காணப்பட்டும், வாதிக்கு மாற்றுப்பரிகாரம் கிடைக்கத்தக்கது என கூடுதல் எழுவினா 1-ல் தீர்வு கண்டுள்ளதால் வழக்கு செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டுமெனவும், வேறு எந்த பரிகாரமும் வழங்க தேவையில்லை என முடிவு செய்து எழுவினா 2-ற்கு தீர்வுகாணப்படுகிறது.

இறுதியாக, வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு வாதிக்கு ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல எனவும், மாற்றுப்பரிகாரம் கிடைக்கத்தக்கது எனவும், வாதிக்கு பிரதிவாதி தாவா கிரைய ஒப்பந்த முன் தொகை ரூ.4,00,000/-த்திற்கு ஒப்புக்கொண்ட வட்டியான ரூ.3,25,000/- சேர்த்து மொத்த தொகை ரூ.7,25,000/-ஐ தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டும் எனவும், அவ்வாறு திருப்பி செலுத்தியவுடன் வாதி வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்து கொடுக்க வேண்டும் எனவும், மேற்படி தொகையை 3 மாத காலத்திற்குள் பிரதிவாதி செலுத்த தவறும் பட்சத்தில் மேற்படி

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:58:19 +0530

தொகை ரூ.7,25,000/-த்தையும், அசல் தொகை ரூ.4,00,000/-த்திற்கு தீர்ப்பு தேதியிலிருந்து தொகை செலுத்தப்படும் தேதி வரை 6% பின்வட்டியும், செலவுத்தொகையும் செலுத்த வேண்டுமென்றும், தீர்ப்பளிக்கப்படுகிறது.

இன்று 2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 22-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:58:25 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 .. சுதர்சனம்

வா.சா.2 .. கனகராசு

வா.சா.3 .. ரவிமணி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | .. | 03.12.2020-ம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.2 | .. | 22.09.2021-ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | .. | அஞ்சல் ரசீது |
| வா.சா.ஆ.4 | .. | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.5 | .. | வா.சா.2-ன் ஆதார் அட்டை நகல் |
| வா.சா.ஆ.6 | .. | வா.சா.3-ன் ஆதார் அட்டை நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :-** இல்லை.

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.22 16:58:42 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.